புதிய அவையம்
(Peer -Reviewed Journal)
ISSN: 2456-821X
Vol. 08, Issue 01 - June 2024

# வட தமிழகத்தில் கழுமர நடுகற்களும் அவற்றின் பின்புலமும்

**முனைவர் ஆ.பிரபு,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி,
திருப்பத்தூர்.

தமிழகத்தின் முற்கால மக்களின் வாழ்வியலையும் அவர்தம் பண்பாடுகளையும் அறிய உதவுபவை தொல்லியல் மற்றும் வரலாற்றியல் எச்சங்கள் ஆகும். வரலாற்று ஆய்வாளர்கள் முயன்றுதேடிக் கொணரும் பல்வேறு சான்றுகள் பல அரிய வரலாற்றினைப் பறைசாற்றுவனவாகும். அவ்வகையில் வட தமிழகத்தின் திருப்பத்தூரில் இருந்து 10கி.மீ தொலைவில் நரியனேரி என்னும் சிற்றூரில் இக்கட்டுரையாளரால் கண்டறியப்பட்ட இரண்டு வரலாற்றுத் தடயங்களின் பின்புலம் குறித்து விவரிப்பதே இக்கட்டுரையாகும்.

நரியனேரி என்ற ஊரின் பேருந்து நிறுத்தத்தில் இருந்து வலது புறமாகச் செல்லும் உட்புறச் சாலையில் அவ்வூரைச் சேர்ந்த மணி என்பவரது விவசாய நிலத்தின் நடுவில் பழமையான நடுகல் ஒன்று அமைந்துள்ளது. இக்கல்லானது 11 அடி நீலமும் 3 அடி அகலமும் கொண்டதாக உள்ளது. இக்கல்லில் நீண்ட கழுமரத்தில் ஆண் ஒருவன்

அமர்ந்த நிலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளான். அவனது இடது கையினை மார்பிலும் வலது கையினை மேல்நோக்கி உயர்த்தியவாறும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளான். அவனது தலைக்கு மேல்புறம் பெரிய அளவிலான குடை ஒன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. இக்குடை அவனை ஒரு அரசன் என அடையாளப்படுத்துகின்றது.

கல்லின் இடது புறத்தில் நின்ற நிலையில் பெண் ஒருத்தி எரியும் விளக்கினை ஏந்தியவாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளாள். இது இறந்த அரசனை தெய்வமாக வழிபடும் நிலைதனை எடுத்துரைப்பதாக உள்ளது. மேலும் இவ்வூரில் இருந்து sஅரியாக வடக்குத்திசையில் 1.5 கி.மீ தொலைவில் உள்ள மணல்கொல்லி என்ற இடத்தில் வானத்துப்பாறை என்ற சிறிய குன்றின் எதிரே உள்ள தனியார் விவசாய நிலத்தில் தரைக்கு மேல் 2 ½ அடி உயரமும் 1 ½ அடி அகலமும் கொண்ட மற்றொரு கழுமர நடுகல் அமைந்துள்ளது. கல்லில் கூர்மையான கழுமரத்தில் தனது இடது காலினை மடக்கி அமர்ந்த நிலையில் ஒரு ஆண் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. அவர் தனது வலது கையினை மேல் நோக்கி உயர்ந்திவாறும் இடது கையினை மார்பின் மீது வைத்த நிலையிலும் காணப்படுகின்றார். நீண்ட காதுகளில் குண்டலமும் இடது புறமாக கொண்டையினையும் வைத்துள்ளார். வேறு எந்த அடையாளங்களோ எழுத்துக் குறிப்புகளோ கல்லில் இல்லை.

இக்கல் இவ்வட்டாரத்தில் நிகழ்ந்த சமயப்பூசல் காரணமாக அல்லது எதேனும் தவறு செய்த ஒருவருக்காக நிறைவேற்றப்பட்ட தண்டனையினைக் குறிப்பதாகும். இக்கல்லினை இவ்வூரைச் சுற்றியுள்ள ஏழு கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்கள் இக்கல்லில் மஞ்சள் பூசி நவதானியங்களைத் தூவி வழிபட்டு வருகின்றனர். தானியங்கள் தூவி வழிபடும் முறையானது தொன்றுதொட்டு நடைபெறும் பழங்கால

வளமைக் குறியீட்டு வழக்கமாகும். இக்கல்லானது கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கக் கூடும். இவ்வட்டாரத்தில் இது போன்ற தண்டனை வழங்கப்பட்டு வந்ததை தொடர்ந்து கிடைக்கும் கழுமர நடுகற்கள் வாயிலாக அறியலாம்.



**கழுமரம்**

கழுமரம் என்பது ஒரு கொலைக்கருவியாகும். மன்னிக்க இயலாத பெருங்குற்றம் புரிவோர்க்கு இத்தண்டனையினை வழங்குவர் அல்லது செய்த குற்றத்திற்குப் பொறுப்பேற்றுத் தாமே கழுமரம் ஏறுவதும் உண்டு. கழுவில் வகைகள் உண்டு. செங்குத்தான கழுமரம் மற்றும் அமர்ந்த நிலையில் ஏற்றும் கழுமரம். குற்றம் புரிந்தோரைக் கழுவின் முனையில் எண்ணையினைத் தடவிக் குற்றாவளியைப் பிடித்து

அவனது ஆசனவாயைக் கழுமுனையில் வைத்து அப்படியே செருகிவிடுவார்கள். உடலின் எடையாலும், கழுவின் கூர்மையாலும், எண்ணெயின் வழுக்கலாலும் உடல் மெதுவாகக் கீழே இறங்கும். கழு மெதுவாக மேலே துளைத்துக் கொண்டு ஏறும். கொஞ்சம் கொஞ்சமாக மரம் உடலினுள் ஏறி குற்றவாளி இறந்து போவான். சாதாரணமாக இறந்தவர்களுக்கு சமயச் சடங்குகள் செய்து புதைப்பார்கள் அல்லது எரியூட்டுவார்கள். ஆனால் கழுமரம் ஏற்றப்பட்டவர்களுக்கு இது கிடையாது. கழுவிலேற்றப்பட்ட உடல் நாய்களுக்கும், நரிகளுக்குமே இரையாகும்.



நரியனேரியில் காணப்படும் இக்கழுமரத்தில் உள்ளவன் ஆளும் தகுதி படைத்த சிற்றரசனாகச் சித்தரிக்கப்பட்டுள்ளான். ஆகவே மிகப்பெரிய குற்றத்தினைச்

செய்ததற்குப் பொறுப்பேற்ற அவ்வரசன் தாமே முன்வந்து கழுவேறி உயிர் துறந்திருக்கக்கூடும். இல்லை என்றால் வேறு ஒரு வலிமைவாய்ந்த அரசனின் ஆளுகைக்கு உட்பட்ட ராஜ்ஜியத்தில் அவனுக்குக் கீழ் ஆட்சி செய்த இச்சிற்றரசன் செய்த குற்றத்திற்காக கழுவேற்றப்பட்டிருக்காலாம். எப்படி இருப்பினும் கழுமரத்தில் உயிர்துறந்த சிற்றரசன் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவனாக இருக்கக்கூடும். ஆகவேதான் அந்நிகழ்வினை இக்கல்லில் சிறப்பமாக வடித்து மக்கள் வணங்கி வந்துள்ளனர்.

**நிறைவாக**

சமயப்பூசல் காரணமாக கழுவேற்றப்பட்ட நபர்களுக்கான நடுகற்களாக இவை இருப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. இப்பகுதியில் ஒரு காலத்தில் பௌத்தமும் சமணமும் இங்கு வழக்கில் இருந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் நிறைய உள்ளன. குண்டுரெட்டியூர் என்ற இடத்தில் சமணப் பள்ளிக்கு 'பள்ளிச்சந்தம்' என்ற நிலக்கொடை வழங்கியதற்கான வட்டெழுத்துக் கல்வெட்டினை இக்கட்டுரையாளர் கண்டறிந்தமையும், குறிப்பாக, 'புத்தகரம்' 'திரியாளம்' 'கௌதம பேட்டை' போன்ற ஊர்ப்பெயர்களை ஒப்பிடுகையில் இவ்விரு நடுகற்களும் சிறப்பிடம் பெறுகின்றன.

**கள ஆய்வுக் களங்கள்:**

1. **நரியனேரி**
2. **கல்நார்சாம் பட்டி**
3. **குண்டுரெட்டியூர்**